**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி.**

**O.S No.124/2016** **Date.05.06.2024**
**(D.W– 1)**

திரு. லோகநாதன் த/பெ.சுப்பிரமணியம்
**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி** :
சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை

1) எனது தகப்பனாரும், 2ம் பிரதிவாதியும் சகோதரர்கள் என்றால் சரிதான். தாவா சொத்து ஒத்தை டாப் போட்டது என்றால் சரிதான். இரண்டு பேரும் தனித்தனியாக சலூன் கடை வைத்துள்ளோம் என்றால் இருவருக்கும் நடுவில் சுவர் உண்டு. சலூன் கடைக்கு தென்புறமாக உள்ள கட்டிடம் முத்துசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் முத்துசாமி கவுண்டருக்கு என் சுவற்றிக்கு தென்புறமாக உள்ளது. முத்துசாமி கவுண்டருக்கு வடபுறம் சுவர் இல்லையா என்றால் எங்கள் சுவர் தான் உள்ளது. என் சுவருக்கும் முத்துசாமி கவுண்டர் சுவருக்கு இடையே சந்து உள்ளதா என்றால் இல்லை.

2) நான் சொல்வது போல தனித்தனிசுவர் கிடையாது என்றும் முத்துசாமிகவுண்டரின் கட்டிடத்தின் தென்புறத்தில் உள்ள சுவரில் தான் கல் பதிக்கப்பட்டு குறுக்கு சட்டம் போட்டு ஒத்தை டாப் போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சுவர் எங்களுடையது. எங்கள் சுவர் எப்போது கட்டப்பட்டது என்றால் என் பாட்டன் காலத்திலிருந்து உள்ளது. எந்த வருடத்தலிருந்து வரி ரசீது உள்ளது என்றால் எந்த வருடம் என்று தெரியாது. என் தாத்தா காலத்திலிருந்து பூர்விகமாக உள்ளது. வரி உள்ளது என்பதை காண்பிக்க ஆவணம் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். நீதிமன்றத்தில் கொடுத்துள்ள ரசீது தவிர வேறு ரசீது உள்ளதா என்றால் திருப்பூர் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேன். திருப்பூரிலிருந்து ரசீது வாங்கி இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் தெரியவில்லை.

3) நான் சொல்வது போல திருப்பூர் நீதிமன்றத்தில் ரசீது ஒப்படைக்கவில்லை என்றும், நான் ஒப்படைத்துள்ளதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கடையின் மின் இணைப்பு என்ன என்றால் முதலில் 690 இருந்தது. தற்போது 290 எண் உள்ளது. எந்த வருடம் இணைப்பு பெற்றேன் என்றால் முதலில்லிருந்து உள்ளது. வருடம் தெரியவில்லை. 1993–லிருந்து மின் இணைப்பு பெறப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. என் அப்பா காலத்திலிருந்து உள்ளது. என் அப்பா காலத்திலிருந்து உள்ளது என்பதை காண்பிக்க மின்அலுவலகத்திலிருந்து ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் கேட்டு பார்த்து தாக்கல் செய்கிறேன். நான் சொல்வது போல 1993 முன்பாக மின் இணைப்பு வழங்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

4) கடைக்கு வடபுறம் கோவை நெடுஞ்சாலை செல்கிறது என்றால் 30 அடி தூரம் தள்ளி செல்கிறது. மேற்படி 30 அடி தூரம் ரோடுக்கு சேர்ந்தது என்றால் சரிதான். நெடுஞ்சாலை எப்போது போட்டு அகலப்படுத்தினார்கள் என்றால் தெரியாது. நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் போது எந்த வித அறிவிப்பும் இல்லாமல் எங்களுக்கு கொடுத்த பட்டாவை வட்டாட்சியர் ரத்து செய்துவிட்டார் என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் நத்தம் நில வரி திட்ட தூய சிட்டாவில் பட்டா ரத்து செய்யப்பட்டு மாறுதல்கள் மேற்கொள்ளப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். **அந்த ஆவணம் வாதி தரப்பில் வா.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது முதுல் விசாரணையில் மேல்முறையீடு செய்து அந்த மேல்முறையீடு நிலுவையில் உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் நான் பட்டா வாங்கியுள்ளேன். பி.சா.ஆ.2 பட்டா உண்மையான பட்டா அல்ல என்று வழக்கிற்கு ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. என் அப்பா எப்போது இறந்தார் என்றால் 2012–ல் பங்குனி மாதத்தில் இறந்தார்.

5) பி.சா.ஆ.2 பட்டா எப்போது கொடுத்தார்கள் என்றால் தற்போதிலிருந்து 2 மாதம் இருக்கும். நாங்கள் சலுன் கடை வைத்துள்ள கட்டிடமும் அதற்கு தென்புறமாக

உள்ள கட்டிடங்களும் முத்துசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எங்கள் சொத்திற்கும் அவர்கள் சொத்திற்கும் சம்மந்தம் இல்லை. முத்துசாமி கவுண்டர் கடநத் 09.09.1941ல் வா.சா.ஆ.7 ஆவணத்தின் படி கிரையம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. நான் 1968–ல் பிறந்துள்ளேன். மேற்படி சொத்தை 08.06.1978 தேதியில் அருணாச்சல கவுண்டர் மனைவி காளியம்மாளுக்கு வா.சா.ஆ.3–ன்படி முத்துசாமிகவுண்டர் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. மேற்கண்ட அதே தேதியில் வா.சா.ஆ.4–ன்படி மறு கிரைய உடன்படிக்கை செய்துள்ளார்கள் என்றால் தெரியாது.

6) 15.12.1986–ல் மீண்டும் வா.சா.ஆ.5–ன்படி முத்துசாமி கவுண்டர் கிரையம் பெற்றுள்ளார் என்றால் தெரியாது. மேற்கண்ட கிரையம் வாங்கிய பிறகு என் அப்பாவும் சித்தப்பாவும் முத்துசாமி கவுண்டரிடம் சிறு சிறு வேலை பார்த்து வந்தார்கள் என்றும், அதனால் அவர்களுக்கு ஒத்தை டாப் போட்டு கட்டிடம் கட்டி கொடுத்தார் என்றால் சரியல்ல. முத்துசாமி கவுண்டர் மணியகாரர் என்றால் அப்படிதான் சொல்வார்கள். நான் பள்ளியில் படிந்த நாட்களிலிருந்து என் அப்பா தண்டல்காராக இருந்தாரா என்றால் 1986–ல் தெரியும் அதற்கு முன்பு தண்டல்காரராக இருந்தாரா என்றால் தெரியாது. என் அப்பா ஓய்வு பெற்று 6, 7 வருடம் வீட்டில் இருந்தார். சக்கரை வந்த விரல் எடுக்கும் வரை கடையில் இருந்தார். என் அப்பா கிராம தண்டலாக இருந்ததால் வட்டாட்சியர் மூலம் பட்டா பெற்றிருந்து பின்னிட்டு நீக்கிவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல.

7) முத்துசாமிகவுண்டர் 24.02.1989 தேதியில் வா.சா.ஆ.11–ன்படி அடைமானம் வைத்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.2 ன்படி வாதியின் தகப்பனார் முத்துசாமி கவுண்டர் துரைசாமி கவுண்டரிடம் கிரையம் வாங்கினார் என்றால் தெரியாது. முத்துசாமிகவுண்டரின் அனுமதியின் பேரில் சலுன் நடத்தி வந்துள்ளேன் என்றும், வாதியின் தகப்பனார் கிரையம் பெற்ற போது அவரின் அனுமதியின் பேரில் சலுன் கடையில் உள்ள இடத்தை அனுபவித்து வந்தேன்

என்றால் சரியல்ல. சலுன் கடைக்கு தென்புறமா உள்ள கடை யாருடையது என்றால் துரைசாமி உடையது. 16.04.2016 ம் தேதி அனுமதி ரத்து செய்து கடையை காலி செய்ய அறிவிப்பு கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12–ல் குறிப்பிட்டுள்ள விலாசம் என்னுடையது என்றால் கடையின் விலாசம் ஆகும். கடைமுகவரிக்கு கடிதம் போட்டால் வரும் என்றால் சரிதான்.

8) அனுமதி ரத்து செய்து கொடுத்த அறிவிப்பை பெற்றுக்கொண்டு தற்போது அறிவிப்பை பெறவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.14–ல் உள்ள கையொப்பம் என்னுடையது என்றும், தற்போது என்னுடையது அல்ல என்று மறுக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு பி அட்டவணை சொத்தில் அனுமதி ரத்து செய்த பிறகு சுவாதீனத்தில் இருக்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. வாதியின் சொத்தை அபகரிக்க வேண்டி பொய்யாக எதிர்வாதம் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ளபடி நானும், 2 ம் பிரதிவாதியும் கடையை காலி செய்து சுவாதீனம் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் என் முன்னிலையில் அவரது கூற்றுப்படி தட்டச்சு செய்யப்பட்டு, அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரி என ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S VADIVEL

Digitally signed by S VADIVEL
Date: 2024.06.05 02:06:12 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அவிநாசி.